<u>முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை</u>

<u>முன்னிலை திருமதி. பி. சுதா, பி.காம்., பி.எல்.,</u>

<u>முதன்மை சார்பு  நீதிபதி.</u>

**<u>HMOP. No.158/2025</u>**

எ.ம.சா.1 தேதி.16.03.2026.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சுவேதா | த/பெ. | சுந்தரபாண்டியன் |
| வயது | 21 | தொழில் | |
| கிராமம் | | தாலுக்கா | |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை

நான் இந்த மனுவில் எதிர்மனுதாரர் ஆவேன். எனது முதல் விசாரணை சங்கதிகளை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள விபரங்கள் எனக்கு தெரியும். அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் நான் சொல்லி தான் தட்டச்சு செய்யப்பட்டது. எனது தரப்பில் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை.

**மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

நீங்கள் என்ன படித்துள்ளீர்கள் என்றால் நான் A.V.C. கல்லூரியில் B.Com final படித்துக்கொண்டிருக்கிறேன். உங்கள் கணவர் படித்துள்ளாரா என்றால் B.B.A. AVC கல்லூரியில் படித்துள்ளார். நானும் எனது கணவரும் ஒரே கல்லூரியில் படித்தோம் என்றால் சரிதான். எனது கணவர் இறுதி ஆண்டு படிக்கும்போது நான் முதலாம் ஆண்டு படித்தேன். எங்கள் திருமணம் காதல் திருமணம் என்றால் சரிதான். இருவீட்டிலும் சம்மதத்துடன் தான் திருமணம் செய்துகொண்டோம் என்றால் சரிதான். நான் தான் முதலில் எனது தரப்பு காதலை எனது கணவரிடம் தெரிவித்தேன் என்றால் சரியல்ல. எனது திருமணத்திற்கு பிறகு எனது கணவருடன் நல்ல முறையில் குடும்பம் நடத்தி வந்தோம் என்றால் சரிதான். நான் தான் எனது கணவருடன் பிரச்சனை செய்து அவருடன் சேர்ந்து வாழமாட்டேன் என்று கூறினேன் என்றால் சரியல்ல. எனது கணவருக்கு குடிப்பழக்கம் கிடையாது என்றாலும் இந்த வழக்கிற்காக நான் அவருக்கு குடிப்பழக்கம் உண்டு என்று பொய்யாக கூறினேன் என்றால் சரியல்ல. எனது கணவர் எதற்காக இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளார் என்றால் அவர் விவாகரத்து கோரி தான் இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளார்.

எனது கணவரால் தாக்கல் செய்யப்பட்ட அசல் வழக்கிற்கு எனது தரப்பில் எதிருரை தாக்கல் செய்துள்ளேன். அதில் நானும் எனது கணவருடன் சேர்ந்து வாழ

விருப்பம் இல்லை என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். எனது திருமணத்திற்காக எனது பெற்றோர் தரப்பிலிருந்து நகைகள் மற்றும் சீர்வரிசை பொருட்களை செய்தார்களா என்றால் சரிதான். எனது பெற்றோர்கள் எனக்கு திருமணத்தின்போது கொடுத்த நகைகள் மற்றும் சீர்வரிசை பொருட்கள் அனைத்தும் திரும்ப பெற்றுக்கொண்டேன் என்றால் சரிதான். அவை அனைத்தும் என் வசம் உள்ளது என்றால் சரிதான். எனது கணவர் குடித்துவிட்டு என்னை அடித்து கொடுமைப்படுத்தினார் என்று எனது எதிருரையில் குறிப்பிட்டுள்ளது வழக்கிற்காக நான் மிகைப்படுத்தி கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் தான் எனது கணவருடன் சேர்ந்து வாழ தயாராக இல்லை என்றும் விவாகரத்து கொடு என்றும் எனது கணவரை கேட்டுக்கொண்டதன்பேரில் அவர் இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை.

<u>முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை</u>
<u>முன்னிலை திருமதி. பி. சுதா, பி.காம்., பி.எல்.,</u>
<u>முதன்மை சார்பு  நீதிபதி.</u>
**<u>HMOP. No.158/2025</u>**

| | | | |
|---|---|---|---|
| எ.ம.சா.2 | | | தேதி.16.03.2026. |
| பெயர் | சுஹாசினி | க/பெ. | சுந்தரபாண்டியன் |
| வயது | 46 | தொழில் | |
| கிராமம் | | தாலுக்கா | |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை

நான்  இந்த மனுவில் எதிர்மனுதாரர் தரப்பு 2ம் சாட்சி ஆவேன். நான் எதிர்மனுதாரரின் தாயாராவேன். எனது முதல் விசாரணை சங்கதிகளை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன்.  அதிலுள்ள விபரங்கள் எனக்கு தெரியும். அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் நான் சொல்லி தான் தட்டச்சு செய்யப்பட்டது. எனது தரப்பில் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை.

**மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

1ம் எதிர்மனுதாரர் எனது மகளாவார்.  எனது கணவர் என்ன வேலை செய்து வருகிறார் என்றால் அவர் ஆட்டோ டிரைவர் ஆவார்.  உங்களுக்கு எத்தனை குழந்தைகள் என்றால் ஒரு மகன், ஒரு மகள் உள்ளனர்.  எனது மகளின் திருமணம் காதல் திருமணம் என்றால் சரிதான். அவர்களது காதல் எங்களுக்கு தெரியவந்ததன் பின்பு பெரியோர்களால் நிச்சயித்து திருமணம் முடித்து வைத்தோம் என்றால் சரிதான். எனது மகள் அவரது கணவருடன் நல்ல முறையில் தான் வாழ்ந்து வந்தார் என்றால் சரிதான். எனது தரப்பில் எனது மகளின் திருமணத்திற்கு சீர்வரிசை பொருட்கள் மற்றும் நகைகள் செய்தோம் என்றால் சரிதான். அந்த சீர்வரிசை பொருட்கள் மற்றும் நகைகள் தற்போது எங்கள் வசம் உள்ளது என்றால் சரிதான். அவற்றை மனுதாரரிடமிருந்து திரும்ப வாங்கிக்கொண்டோம் என்றால் சரிதான். எனது மகளுக்கு மனுதாருடன் சேர்ந்து வாழ விருப்பம் இல்லை என்பதை  எதிர்மனுதாரர் எதிருரையில் தெரிவித்த விபரம் எனக்கு தெரியும்.  எனது மகள் என்னுடைய பாதுகாப்பில் உள்ளார் என்றால் சரிதான்.  மனுதாரர் எனது மகளை நல்ல முறையில் வாழ்ந்து வந்தார் என்றாலும் அதனை மறைத்து எனது நிரூபண வாக்குமூலத்தில் பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் மனுதாரர் குறித்து கூறியுள்ள தகவல் அனைத்தும்

பொய்யானவையே, அதில் எந்தவித உண்மைத்தன்மையும் இல்லை என்றால் சரியல்ல.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை.